

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப. தாயகம் கவி தாயார் திருமதி ப.சௌந்தரி அம்மையார் அவர்கள் உடல்நலக் குறைவால் மறைந்ததையொட்டி சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள இல்லத்திற்கு நேற்று முன்தினம் (27.10.2025) நேரில் சென்று அவரது திருவுடலுக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



சென்னை மண்டலத்திற்குட்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் நியமனம் மற்றும் இளைஞரணி ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (27.10.2025) அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கோல்டு பிரகாஷ், ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, பிரபாகராஜா எம்.எல்.ஏ., ராஜா அன்பழகன், ப.பிரகாஷ், ஆர்.டி.மதன்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில் நேற்று முன்தினம் (27–10–2025) ஆசிய இளையோர் கபடி போட்டியில் தங்கம் வென்ற கண்ணகி நகர் கார்த்திகாவை வாழ்த்தி, பாராட்டி வெள்ளி செங்கோல் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, மாவட்ட நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் தா.விஸ்வநாதன், மு.மனோகரன், எஸ்.பாஸ்கரன், பகுதி கழக செயலாளர்கள் வி.இ.மதியழகன், பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், எம்.கிருஷ்ணமூர்த்தி, நொளம்பூர் வே.ராஜன், வே.ஆனந்தம், எம்.விநாயகமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், வட்டச் செயலாளர்கள் ஜோதி, ஏகாம்பரம், சீனிவாசன் மற்றும் கார்த்திகாவின் கபடி பயிற்சியாளர் ராஜ், கார்த்திகா குடும்பத்தினர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

## செங்கல்பட்டு மாவட்டம்:

# முட்டுக்காடு பகுதியில் ‘கலைஞர் சர்வதேச பன்னோக்கு அரங்கம்’ பணி!

## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு!

சென்னை, அக். 29 -

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று செங்கல்பட்டு மாவட்டம் முட்டுக்காடு பகுதியில் உருவாகி வரும் “கலைஞர் சர்வதேச பன்னோக்கு அரங்கம்” பணிநிலையை நேரில் பார்வையிட்டார். இத்திட்டம் 2.6.2023 அன்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்டு, 29.5.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

திட்டத்தின் விவரங்கள் வருமாறு:-

அரசாணை எண்: 23 நாள்: 04.09.2024, மொத்த திட்ட மதிப்பு: ரூ. 525 கோடி

நிலம் ஒதுக்கீடு: 37.99 ஏக்கர் கட்டட உயரம்: அடித்தளம் + முதல் தளம்

மொத்த கட்டட பரப்பளவு: 2.08 இலட்ச சதுர அடி

இதில்: கண்காட்சி அரங்கம் - 91,924 சதுர அடி, பன்னோக்கு அரங்கம் - 50,633 சதுர அடிஇ கலையரங்கம் - 64,960 சதுர அடி,

பணி துவக்கம்: 29.05.2025, பணிக்காலம்: 18 மாதங்கள், பணி நிறைவு இலக்கு: பிப்ரவரி 2026

தற்போதைய நிலை: இரண்டாம் தள பணி நடைபெற்று வருகிறது

முக்கிய வசதிகள் கண்காட்சி அரங்கம் (10,000 நபர்கள் அமரும் வசதி), பன்னோக்கு அரங்கம் (5,000 நபர்கள் அமரும் வசதி), கலையரங்கம் (1,500 நபர்கள் அமரும் வசதி), VIP அறைகள்,

● உணவுக் கூடம், பத்திரிக்கையாளர் அறை, அலுவலக அறைகள், 1,638 நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் 1,700 இரண்டு சக்கர வாகனங்களுக்கு நிறுத்துமிடம்

**பெற்ற அனுமதிகள்**

● சுற்றுச்சூழல் அனுமதி, DTCP அனுமதி, கடலோர ஒழுங்குமுறை ஆணைய அனுமதி,

● தீயணைப்புத் துறை அனுமதி

அமைச்சர் எ. வ. வேலு பார்வையிட்ட இந்த ஆய்வுக் கூட்டத்தில் பொதுப் பணி துறை செயலாளர் மங்கத் ராம் சர்மா பொதுப்பணி துறை தலைமை பொறியாளர் மணிவண்ணன், பொதுப் பணி துறை தலைமைப் பொறியாளர் மணிகண்டன் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பங்கேற்றனர். துறை கலந்து கொண்டனர்.

இத்திட்டம் நிறைவடைந்தவுடன், உலகத் தரத்திலான கண்காட்சி மற்றும் பன்னோக்கு அரங்கங்கள் தமிழகத்தின் சர்வதேச அடையாளமாக மாறும் என அமைச்சர் தெரிவித்தார்.

## உலகச் செயல்முறை மருத்துவ நாள்!

# மாண்புடன் மக்கள் செயல்பட உதவும் மருத்துவர்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 29 -

உலகச் செயல்முறை மருத்துவ நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**உலகச்செயல்முறை மருத்துவ (Occupational Therapy) நாளில், மாண்புடனும் சுதந்திரமாகவும் மக்கள் செயல்பட உதவும் மருத்துவர்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள்!**

**நமது திராவிட மாடல் அரசும் மாற்றுத் திறனாளிகளுக்கான ‘விழுதுகள்’ - ஒருங்கிணைந்த சேவை மையம், ஆட்டிசம் பாதித்தோருக்கான சிறப்புத் திறன் மையம் ஆகியவற்றைத் தொடங்கி இந்தச் செயல்பாடுகளை மேம்படுத்தி வருகிறது. அக்கறை, அனைவரையும் உள்ளடக்கிய தன்மை, ஒவ்வொரு தனிநபருக்கும் வாய்ப்பு கொண்ட தமிழ்நாட்டை ஒன்றிணைந்து உருவாக்கி வருகிறோம்.**

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ.

# தாயார் திருமதி ப.சௌந்தரி அம்மாள் மறைவு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை,அக்.29-

கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. தாயார் திருமதி ப.சௌந்தரி அம்மாள் மறைவுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் அஞ்சலி செலுத்தினார்.

கழக துணை அமைப்புச் செயலளார் - திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவியின் தாயார் திருமதி. சௌந்தரி அம்மாள் (வயது 97) நேற்று முன்தினம் (27.10.2025 ) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



செய்தி அறிந்ததும், கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா, அன்பககம் கலை, பூச்சி முருகன், ஜெயக்குமார்,

டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவமெய்யநாதன், மேயர் பிரியா, தயாநிதிமாறன், கலாநிதிவீராசாமி, காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை, புதுவை சிவா, சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், ஜோசப்சாமுவேல்,அ.வெற்றியழகன், ஜெ.கருணாநிதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, ஆ.கிருஷ்ணசாமி, ஆஸ்டின், பி.கே.பாபு, மு.மகேஷ்குமார், அப்துல்மாலிக், ஜோயல் எபினேசர் காரம்பாக்கம் கணபதி பகுதி கழக செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், தமிழ்வேந்தன், தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீதரன்,த.இளையஅருணா, மருத்துவர் கோகுல், கவிகனேசன் பிகே மூர்த்தி பரிதி இளம்சுருதி கன்னிகைஸ்டாலின் ராஜாஅன்பழகன் ஈரோடு இறைவன் இறையன்பன் குத்தூஸ் புழல் நாராயணண் சைதை மா அன்பரசன் தமீம் புஷ்பராஜ் அபோய் மோகன்குமார் த.சம்பத் கிருஷ்ணகுமார் உள்ளிட்ட பலரும் வருகை தந்து அஞ்சலி செலுத்தினர் அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (28.10.2025) மதியம் 2 மணியளவில் 15 \9 தலையாரி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 33, இல்லத்தில் இருந்து புறப்பட்டு கண்ணம்மா பேட்டை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் மத்திய ஒன்றிய இலக்கிய அணி துணை அமைப்பாளர் பெ.முருகேசன் & விமலா இவர்களின் இல்ல திருமண விழாவில், வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். கழக புரவலர் துரைசிங்காரம், மேற்கு, மத்திய ஒன்றியச் செயலாளர்கள் எல். இரவிச்சந்திரன், கே. சீதாராமன், மாநில கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைச் செயலாளர் சி.கோபி. மாவட்ட கவுன்சிலர் எம்.அசோக்குமார், சா. பரிமளம், கே.கே. சிட்டிபாபு, கே.குப்பன் ஆகியோரும் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள்.

## விஜயகுமார் தலைமை! செஞ்சி ஒன்றியம் - கெங்கவரம் ஊராட்சியில்

# 1.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார மருத்துவமனைக் கட்டிடம்!

## திட்டப் பணியை செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக். 29-

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கெங்கவரம் ஊராட்சியில் ஊரக வளர்ச்சி துறை சார்பில் 15 வது மானிய நிதி குழு திட்டத்தின் கீழ் 1 கோடியே 45 லட்சத்தி 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார மருத்துவ மனை கட்டிடம் கட்டுவதற்கு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார்.

ஒன்றிய கவுன்சிலர் சதியா கார்த்திகேயன், ஊராட்சி மன்ற தலைவர் மகேஸ்வரி பொற்ச்செழியன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சத்தியமங்கலம் வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் யோக பிரியா அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு

1 கோடியே 45 லட்சத்தி 62 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டிடம் கட்டுவதற்கு பணியை தொடங்கி வைத்தார். தொடர்ந்து நிகழ்ச்சிக்கு வருகை தந்த பொதுமக்களிடம் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. குறைகளை கேட்டறிந்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன்,செஞ்சி மத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், செஞ்சி மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன்,அரசு மருத்துவர் கவிக்கோ தமிழரசன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர்,ஒன்றிய பொறியாளர் ஆனந்தி, மாவட்டக் கவுன்சிலர் அகிலா பார்த்திபன், ஒன்றிய நிர்வாகிகள் வாசு, அய்யாதுரை, திருநாவுக்கரசு, ஒன்றியமாணவரணி அமைப்பாளர் திருமாவளவன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் தமிழ்ச்செல்வி தங்கதுரை, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் தனலட்சுமி கணபதி, குமார், சக்திவேல், ஊராட்சி நிர்வாகிகள் சங்கர், கணேசன், அன்பழகன் ஊத்துக்குட்டை கணேசன், ரமேஷ், சதாசிவம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**க. சுப்பு**

**அக்டோபர் 29 (2011)**



**கழகத்தில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தவர்.**

**மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு கைதியாக சென்னை சிறையில் இருந்தார்.**

**சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக திகழ்ந்து திறம்பட பேசி வாதிட்டவர்.**

**கழகத்தில் தொழிலாளர் அணிச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களில் தலைவராகவும் பணியாற்றினார்.**

**“பகைவரையும், வசீகரிக்கக்கூடிய பேச்சாற்றலும், வாதத்திறமையும் பெற்றவர் சுப்பு” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**